**31.01.2024**

**CC.101/2018**

**PW-1, சங்கரேஸ்வரி**

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

நான் என் கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது இரண்டு முறை திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் நடந்த சம்பவத்தை தான் புகாராக எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு புகாரிலும் மாறுதல் ஏதும் இருக்காது என்றால் சரிதான். இரண்டு புகாரில் ஒன்றுக் கொன்று முரணாக இருந்தால் அது தவறு தான். அதில் எது உண்மை என்று கண்டுபிடிக்க முடியாது என்றால் சரிதான். ஒரு புகாரில் உள்ள விஷயம் இன்னொரு புகாரில் மாறுபாடாக இருந்தால் எது உண்மை என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். 23.06.2017 ம் தேதி திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் நான் ஒரு புகார் கொடுத்து அதற்கு மனு ரசீதும் வழங்கி விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அது முடிந்து 17 நாளில் மற்றொரு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சேர்ந்து வாழ்வதாக சொல்லிவிட்டு வாழவராததால் 2 வது புகார் கொடுத்தேன். முதல் புகாரில் மற்ற எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1 வது எதிரி விஷப்பாட்டிலை கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். 2 வது புகாரில் என்னை 4 பேர் மிரட்டி பாலை குடிக்க சொன்னதாக உள்ளது. முதல் புகார் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட எ.ம.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் புகாரில் 29.05.2017 அன்று என் கணவர் வீட்டிற்கு சென்று கேட்டதற்கு எதிரிகள் 1 முதல் 4 என்னை இதுக்கு எங்கடி வந்த என அசிங்கமாக பேசி நாத்தனார் நித்யகல்யாணி முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டதாகவும் கொலை செய்து விடுவதாக மிரட்டியதாக உள்ளதா என்றால் இல்லை. மேற்படி வாசகங்கள் 2 வது புகாரில் உள்ளது என்றால் சரிதான். முதல் புகாரில் 35 பவுன் நகை, 1 லட்சம் பெருமானமுள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்ததாக எழுதிவிட்டு 2 வது புகாரில் 25 பவுன் தங்க நகையும் 1 லட்சம் ரொக்கமாகவும் 2 லட்சம் சீர்வரிசை பொருட்களும் கொடுத்ததாக உள்ளதாக உள்ளது என்றால் சரிதான். முதல் புகாரில் 25 பவுன் என்பதற்கு பதிலாக தவறுலாக 35 பவுன் என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. முதல் புகாரில் நான் ரொக்கம் பற்றி நான் எதுவும் பேசவில்லை. அது விடுபட்டுவிட்டது. முதல் புகாரில் வாசிங் மெசினை தூக்கி சென்றதாக எழுதவில்லை. 2 வது புகாரில் அது சம்பந்தமாக எழுதியுள்ளேன். நான் என் கணவர் மீது கொண்ட கோபத்தின் காரணமாகவும் அவர்களது சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் வீட்டார்களை தவறு செய்ததாக சொல்லி நடக்காத சம்பவங்களை நடந்ததாக காட்டி பொய்யான புகாரை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நகை முதல்

புகாரில் 2ம் பக்கத்தில் என்னிடம் உள்ள 35 பவுன் நகை ரொக்கம் 2 லட்சம் உன் பெற்றோரிடம் வாங்கி வந்து எங்களிடம் கொடுத்தால் நீ சுரேஷ்குமாரிடம் வாழலாம் என கூறிவிட்டு 2 வது புகாரில் அது சம்பந்தமாக எந்த விஷயமும் கூறாமல் இருப்பது உங்கள் கை வசம் உள்ள நகைகளை அவர்கள் அபகரித்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருந்து குடித்துவிட்டதாக நான் மருத்துவதுறையில் பணிபுரிவதால் எதிரிகளை பயமுறுத்துவதற்காக நானாகவே இந்த செயலை உற்பத்தி செய்துகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்னவிதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.